கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.98/2022 வா.சா.1கலைச்செல்வி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 22.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.com. M.Phil படித்துள்ளேன் என் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் M.B.A. M.Com. படித்துள்ளார். நானும், என் கணவரும் என்ன வேலை செய்கிறோம் என்றால் விவசாயம் செய்கிறோம். இணைய வழியில் காவல் துறையில் புகார் அளித்தால் அது பதிவுசெய்யப்பட்டு மனு இரசீது வழங்கப்படுவது கட்டாயம் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும், ஆனைமலை காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 5 அல்லது 6 கிலோ மீட்டர் இருக்கும். நான் வசிக்கும் வீட்டிற்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கிலோ மீட்டர் இருக்கும்.

2) வழக்கு சொத்து எனது கணவருக்கு மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.126/2013-ல் மக்கள் சமரச நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பாணைபடி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணைதான் நான் இவ்வழக்கில் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 தீர்ப்பணை விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணைக்கு கட்டுப்பட்டுதான் என் கணவர் என் பெயருக்கு வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தினார் என்றால் சரிதான். எனக்கு

எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் கடந்த 2011-ல் திருமணம் நடந்தது.

3) வா.சா.ஆ.2 தீர்ப்பணைக்குபின், என் கணவருக்கும், பிரதிவாதிக்கும் உறவு எப்படிஇருந்தது என்றால் பேச்சுவார்த்தையில்லை. என் வழக்குரையில் என் கணவருக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 2019 டிசம்பரில்தான் சிறு மனஸ்தாபம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது என்ன மனஸ்தாபம் என என் வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி மனஸ்தாபம் என்ன என்று தற்போது கூறமுடியுமா என்றால் நாங்கள் தோட்டத்திற்கு செல்லும்போது பிரதிவாதியும், அவரது ஆட்களும் வழிமறித்து இடையூறு செய்தார்கள். செட்டு நீர் பாசன குழாயை திறந்துவைத்து வண்டித்தடத்தை பயன்படுத்த முடியாதவாறு செய்தார்.

4) வழக்கு ஆ.அட்டவணை வண்டித்தடம்தான் எனக்கும், பிரதிவாதிக்கும் பொதுவான வண்டித்தடம் என்றால் சரிதான். அந்த வண்டித்தடம் இல்லை எனில் நாங்கள் இருவருமே அவர் அவர் சொத்துக்கு செல்ல இயலாது என்றால் பிரதிவாதி தனக்கு தனி வண்டித்தடம் ஏற்படுத்திவிட்டு பொது வண்டித்தடத்தை சேதப்படுத்தினார். பிரதிவாதி தனி வண்டித்தடம் ஏற்படுத்தியதாக நான் என் வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் தற்போதுதான் வண்டித்தடத்தை ஏற்படுத்தினார். வழக்கிற்கு பின்னிட்டுதான் தனி வண்டித்தடத்தை பிரதிவாதி ஏற்படுத்தினாரா என்றால் சரியல்ல. பிரச்சினை ஏற்பட்டபோது தனி வண்டித்தடத்தை பிரதிவாதி ஏற்படுத்தினார். பிரதிவாதி நான் கூறியவாறு தனி வண்டித்தடம் ஏதும் அமைக்கவில்லை என்றும், அவ்வாறு அமைத்திருந்தால் அது எந்த புல எண்கள் வழியாக செல்கிறது என

வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றும், சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)